[*2022 ஏப்ரல் 8*

தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்றபோது, தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய கால்நடை நிலையங்களை ஆய்வு செய்து, பழுதடைந்த கால்நடை நிலையங்களுக்கு புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து ஆய்வு செய்வதற்காக எங்களுக்கு உத்தரவு வழங்கியிருக்கின்றார்கள். அந்த வகையில், வரவிருக்கின்ற காலத்தில், அந்தக் கால்நடை நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 81, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

81—

உயரழுத்த மின்கம்பிகள்

***1644—திரு. துரை. சந்திரசேகர்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, வடக்குபட்டு கிராமத்தில் வீடுகளுக்கு மேலே செல்லும் உயரழுத்த மின்கம்பிகளை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, வடக்குபட்டு கிராமத்தில் வீடுகளுக்கு மேலே செல்லும் உயரழுத்த மின்கம்பிகளை மாற்றியமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இன்று மாலைக்குள் அந்தப் பணிகள் நிறைவுபெறும் என்பதை மாண்புமிகு

2022 ஏப்ரல் 8]

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர் அவர்கள், நன்றி சொல்லுங்கள்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளாமலேயே செய்து கொடுக்கக்கூடிய இந்த அரசு, கேட்டவுடன், இன்று மாலைக்குள் செய்து கொடுக்கப்படும் என்று உறுதி அளித்ததற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துறையினுடைய அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மீஞ்சூர் ஊராட்சி, தடபெரும்பாக்கம் கிராமப் பஞ்சாயத்தில் சுமார் 200 குடும்பங்கள் வசிக்கின்றன. அவர்களது வீடுகளுக்கு மேலே உயரழுத்த மின்கம்பிகள் செல்கின்றன. அதை மாற்ற வேண்டும் என்று அம்மக்கள் நீண்ட நாட்களாக கோரி வருகிறார்கள். அதையும் தாங்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டு, செய்து முடிக்குமாறு பணிவுடன் கேட்டு, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து ஆய்வு செய்து, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர் அவர்கள்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றிகளைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொண்டு அமருகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

82—

செவிலியர் கல்லூரி

***1278—திரு. மா. செந்தில்குமார்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சியில் செவிலியர் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி அருகில் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் தற்போது 50 இருக்கைகளுடன் அரசு செவிலியர் கல்லூரியும், 100 இருக்கைகளுடன் அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளியும், பக்கத்தில் இருக்கிற இன்னொரு மாவட்டமான கடலூரில் 50 இருக்கைகளுடன் செவிலியர் பள்ளியும் செயல்பட்டு வருவதால், உடனடியாக கள்ளக்குறிச்சியில் புதிய செவிலியர் பயிற்சிக் கல்லூரி துவங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சாதனையாக தமிழகத்தில் 11 மருத்துவக் கல்லூரிகளை ஒரே ஆண்டில் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் கொண்டு வந்து பெருமை சேர்த்தார். அதன் தொடர்ச்சியாக, சங்கராபுரம், ரிஷிவந்தியம், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி, திருக்கோயிலூர் ஆகிய 5 தொகுதிகளை உள்ளடக்கிய கள்ளக்குறிச்சி மாவட்டம் மிகவும்*